செய்தி வெளியீடு எண்:134 நாள் :29.02.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 27.2.2016 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய்த் துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூரில் 1 கோடியே 64 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் குடியிருப்பை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும் 40 கோடியே 36 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

கிராம நிர்வாகம் முதல் மாவட்ட நிர்வாகம் வரையான கள நிர்வாகப் பணிகளையும் நில நிர்வாகப் பணிகளையும் செயல்படுத்தி வருவதோடு பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் மக்களிடத்தில் கொண்டு சேர்க்கும் மிக முக்கிய துறையாக விளங்கும் வருவாய்த் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், புதுக்கோட்டை மாவட்டம் – இலுப்பூரில் தரை மற்றும் முதல் தளத்துடன் 1 கோடியே 64 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் மற்றும் வருவாய் கோட்ட அலுவலர் குடியிருப்பு ஆகியவற்றை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள். இப்புதிய கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடமானது, வருவாய் கோட்ட அலுவலர் அறை, பணியாளர்கள் அறை, கூட்ட அறை, கணினி அறை, பதிவு வைப்பறை, பணியாளர்கள் உணவருந்தும் அறை, கழிப்பறை, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

மேலும், திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூரில் 1 கோடியே 49 லட்சத்து 58 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு;

செங்கல்பட்டு, மதுரை (கிழக்கு), உசிலம்பட்டி, சேலம் (தெற்கு), சேலம் (மேற்கு), திருவெறும்பூர் மற்றும் நீடாமங்கலம் ஆகிய இடங்களில் 14 கோடியே 33 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்;

கடலூர் மாவட்டம் – வேப்பூர், கரூர் மாவட்டம் – மண்மங்கலம், வேலூர் மாவட்டம் – நாட்றாம்பள்ளி, திருவண்ணாமலை மாவட்டம் – கலசப்பாக்கம் ஆகிய இடங்களில் 8 கோடியே 81 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புகள்;

அரியலூர் மாவட்டம் – நாகமங்கலம் மற்றும் கீழபலூர், கரூர் மாவட்டம் – புகளூர், தொரனாக்கல்பட்டி, கே.பரமத்தி, வெள்ளியணை, தாழப்பட்டி மற்றும் கட்டளை ஆகிய இடங்களில் 1 கோடியே 5 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புகள்;

கரூர் மாவட்டம் – லட்சுமிநாராயண சமுத்திரம், ஜெகதாபி, காக்கவாடி, சித்தலவாய், தென்னிலை (மேற்கு), தென்னிலை (கிழக்கு), புன்னம், வேலம்பாடி, நஞ்சைப்புகளூர், மண்மங்கலம், ஏனம், கொடந்தூர் (தெற்கு), சின்னத்தாராபுரம், கூடலூர் (கிழக்கு), கொடையூர், மொடக்கூர் (கிழக்கு), ஆலமரத்துப்பட்டி ஆகிய இடங்களில் 1 கோடியே 18 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 17 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்புகள்;

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம்; இராமேஸ்வரத்தில் 2 கோடியே 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா மாளிகை;

நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறையின் குறுவட்ட அளவர்களுக்கு திருவாரூர் மாவட்டம் – நீடாமங்கலம் மற்றும் சன்னாநல்லூரில் 25 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 42 கோடியே 81 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வருவாய்த் துறை, நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறைகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – எழும்பூர், மதுரை மாவட்டம் – மேலூர், கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் (வடக்கு), விருதுநகர் மாவட்டம் – சாத்தூர் ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட 4 புதிய வருவாய் கோட்டங்கள்;

கீழ்பென்னாத்தூர், மேல்மலையனூர், கண்டாச்சிபுரம், சூளகிரி, காரிமங்கலம், நல்லம்பள்ளி, காடையாம்பட்டி, பல்லாவரம், நெமிலி, பேர்ணாம்பட்டு, மானூர், சேரம்மகாதேவி, கொமாரபாளையம், தாளவாடி, கொடுமுடி மற்றும் மொடக்குறிச்சி ஆகிய இடங்களில் தோற்றுவிக்கப்பட்ட 16 புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), வருவாய்த் துறைச் செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., நில அளவை மற்றும் நிலவரித் திட்ட ஆணையர் திருமதி இரா. வாசுகி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள்: 29.2.2016